அத்தியாயம் 5

ஸக்துப்ரஸ்தேன வோ நாயம் யக்ஞஸ்துல்யோ னாராதிபா:

# தபஸ்விகளின் யக்ஞங்கள்

தர்மபுத்திரரான மகாத்துமா யுதிஷ்டிரர் மேற்கொண்ட மகா அசுவமேத யக்ஞம் மஹாபாரதத்தின் ஏறத்தாழ இறுதிக் கட்டத்தில் நடை பெற்றது. அங்குப் பாலும் தயிரும் ஆறாய்ப் பெருக, நெய்யானது குளமாய்த் தேங்க, நெற் குவியல்கள் மலைகளாயின. ஜம்பூத்வீபத்தின் அனைத்து நாடுகளிலிருந்தும் எண்ணற்ற மக்களும், பெரும்பாலும் அனைத்து மன்னர்களும் அங்குப் பல மாதங்கள் தங்கியிருந்து சுவை யான உணவையும் மனதிற்குப் பிடித்த மற்ற பதார்த்தங்களையும் பெற்று மட்டிலா மகிழ்ச்சியும் திருப்தியும் அடைந்தனர். அவர்கள் தத்தமது நாடு நகரங்களுக்குத் திரும்பிய பிறகும் தாங்கள் அனுபவித்த அந்த சிறந்த யக்ஞத்தின் பெருமைகளைப் பற்றி நெடு நாட்கள் வரையிலும் பேசிப் புகழ்ந்து கொண்டிருந்தனர்.

ராஜா யுதிஷ்டிரரின் இச்சிறந்த யக்ஞத்தின் முடிவில், திடீரென்று, ஒரு கீரிப்பிள்ளை தோன்றியது. அதன் கண்கள் நீல நிறமாகவும், உடலின் ஒரு பகுதி பொன் மயமாகவும் விளங்க திவ்வியமான ரூபமுடையதாய் அது காட்சியளித்தது. அம்மண்டபத்திற்கு வந்த அந்த அற்புதமான கீரி இடி முழக்கம் போன்று பயங்கரமாகக் கர்ச் சினை புரிந்தது. அப்பேரொலி கேட்ட மிருகங்களும் பறவைகளும் பயத்தால் நடுங்கின. பின் அக்கீரிப்பிள்ளை மனிதர்களின் குரல் கொண்டு மிகவும் துடுக்குத்தனத்துடன் இவ்வாறு சாற்றியது [1]:

[1] மஹாபாரதம் ஆச்வமேதிக 90.7, ப. 6293

सक्तुप्रस्थेन वो नायं यज्ञस्तुल्यो नराधिपाः।
उञ्छवृत्तेर्वदान्यस्य कुरुक्षेत्रनिवासिनः ।।

ஓ! அரசர் பெருமக்களே! உங்களுடைய இந்த யக்ஞம், வயல்களிலிருந்தும் சந்தைகளிலிருந்தும் மணி மணியாய்த் தானியங்களைச் சேகரித்து, உஞ்சவிருத்தியின் மூலம் வாழ்க்கையை நடத்தி வந்த குருக்ஷேத்திரவாசியான அந்த தாராள மனம் கொண்ட பிராமணர் தானமாக வழங்கிய ஒரு பிரத்தம் சத்து மாவுக்கு ஒரு காலும் ஈடாகாது.

அக்கீரிப்பிள்ளையின் இந்த அதிசயமான மொழியைக் கேட்டு அந்த யக்ஞத்தில் கூடியிருந்த பெருமக்கள் அனைவரும் மிகவும் அதிர்ச்சியடைந்து யுதிஷ்டிரரின் பெரும் யக்ஞத்தை அது இவ்வாறு அவமதிப்பதன் காரணத்தைக் கேட்டனர். உடனே அந்தத் திவ்விய ரூபமுடைய அக்கீரிப்பிள்ளை குருக்ஷேத்திரத்தில் வாழ்ந்த தபஸ்வியும், மகத்தான தானம் புரிந்தவருமான அந்த பிராமணரின் கதையைக் கூறத் தொடங்கியது.

## குருக்ஷேத்திரத்து உஞ்சவிருத்தி பிராமணர் கதை

தருமத்தின் வழிமுறைகளை நன்குணர்ந்த தருமவான்களால் எப்பொழுதும் நிரம்பியிருக்கும் புண்ணிய பூமியான குருக்ஷேத்திரத்தில் ஒரு பிராமணர் வசித்து வந்தார். அவர் தவநெறி பூண்டு உஞ்சவிருத்தியின் மூலம் தம் வாழ்வை நடத்தி வந்தார். புறாக்களைப் போன்று வயல்களிலிருந்தும் கடைவீதிகளிலிருந்தும் கீழே சிதறிக் கிடக்கும் தானியங்களை ஒவ்வொன்றாக ஆய்ந்தெடுத்து, இவ்வாறு சேகரித்த தானியங்களைக் கொண்டே தம்மையும் தம் குடும்பத்தாரையும் பராமரித்து வந்தார்.

அந்தப் பிராமணரின் குடும்பத்தில் அவருடைய மனைவி, மகன் மற்றும் மருமகள் இருந்தார்கள். அவர்கள் அனைவருடைய ஜீவனமும் உஞ்சவிருத்தியின் மூலமே நடைபெற்றது. இவ்வாறு கிருகஸ்தாசிரம நெறியில் ஒழுகிய போதிலும் அந்நால்வரும் மகாதபஸ்விகளாய் வாழ்ந்தனர். அவர்களுடைய நடைமுறை ஆசாரங்கள் தூய்மை உடையதாய் இருந்தன. தம் இந்திரியங்களை அடக்கி தருமத்திலேயே

நிலைப்பெற்றிருந்தனர். உஞ்சவிருத்தியின் மூலம் சேகரிக்கப்பட்ட அச்சிறுமளவு உணவையும் ஆறு வேளைகளுக்கு ஒரு வேளை மட்டுமே உட்கொண்டனர். மற்ற ஐந்து வேளைகளிலும் உபவாசம் மேற்கொண்டனர். மேலும், ஏதாவது காரணத்தால் அந்த ஆறாவது வேளையை உணவின்றி கழிக்க நேரிட்டால், அடுத்த ஐந்து வேளை களையும் உண்ணாமல் கழித்து மீண்டும் ஆறாவது வேளை வந்த பிறகே அவர்கள் உணவு உட்கொண்டனர்.

ஒரு முறை அங்கு கடும் பஞ்சம் நிலவியது. வயல்களில் பயிர் கள் வாடின. கீழே இறைந்து கிடக்கும் தானியங்கள் கிடைப்பதும் அரிதாயிற்று. அப்பிராமணக் குடும்பத்தினரோ அவ்வப்போது சேக ரித்த தானியங்களைக் கொண்டே ஒவ்வொரு உணவு வேளைக்கும் உணவாக்கி வந்தனர். அவர்களிடம் சேமித்து வைத்த தானியம் எதுவும் கிடையாது. எனவே, வயல்களில் தானியங்கள் கிடைப்பது அரிதான வுடன் அவர்கள் முற்றிலும் வறியவர் ஆயினர். ஆறு முறைக்கு ஒரு முறை உண்ணும் அவர்களது போஜன வேளை ஒன்றன் பின் ஒன்றாக வந்து சென்றது. ஆனால் அந்த பிராமணர் குடும்பமோ உண்ண உணவின்றி பசியுடனே காலம் கழித்தது.

இவ்வாறு பல வாரங்களை அக்குடும்பம் பட்டினியாகவே கழித்தது. பின், ஒரு நாள் ஆனி மாதத்தில், உச்சி வெயில் நேரத்தில் அக் குடும்பத்தினர் அனைவருமே சிதறியுள்ள தானியங்களைத் தேடக் கிளம்பினர். கடும் பசியும் கொடும் வெயிலும் வருத்திய போதிலும் அக்குடும்பத்தினர் தம் எளிய உணவைத் தேடச் சென்றனர். ஆனால் அதுவும் கிடைக்காமல் வெற்றுக் கைகளுடன் திரும்பினர். அந்த ஆறாவது போஜன வேளையையும் உணவின்றியே கழித்தனர்.

அடுத்த ஐந்து வேளைகளையும் மிகுந்த சிரமத்துடன் கழித்தனர். அதன் பிறகு அவர்கள் உட்கொள்ள வேண்டிய ஆறாவது வேளை வந்த போது மீண்டும் நால்வரும் சேர்ந்து தானியம் தேடப் புறப்பட்டனர். இச்சமயம் அதிர்ஷ்டவசமாக அவர்களுக்குச் சிறிதளவு தானியம் கிட்டி யது. மிகவும் கவனத்துடன் சேகரித்த அந்தத் தானியத்தை எடுத்துச் சென்று, வறுத்து, இடித்து, சத்துமாவு தயாரித்தனர். முறைப்படி ஆசாரங்களை அனுஷ்டித்து உரிய ஜபங்களையும் ஹோமங்களையும் நிறைவேற்றிய பிறகு அவர்கள் வறுத்து இடித்த அந்த எளிய உணவை நான்கு பாகங்களாகப் பிரித்து உட்கொள்ள அமர்ந்தனர்.

உணவு உட்கொள்ள ஆயத்தமாய் அமர்ந்த அவர்கள் உண்ணத் தொடங்குவதற்கு முன்பு அவர்கள் வீட்டு வாயிலில் ஒரு அதிதி தோன்றினார். கடும் பசியால் துன்பப்பட்ட போதிலும் அவர்கள் உணவு வேளையில் வீட்டுக்கு வந்த அந்த விருந்தினரைக் கண்டு மகிழ்ச்சி அடைந்தனர். அவரை இன்முகத்துடன் வரவேற்று குசலம் விசாரித்தனர். பிறகு தம்முடைய குடிலுக்குள் வருமாறு அழைத்தனர். குடும்பத்தலைவரான உஞ்சவிருத்தி பிராமணர் பணிவுடன் அதிதியை ஆசனத்தில் அமரச் செய்து, முறையுடன் அதிதிகளுக்கு அளிக்க வேண்டிய அர்க்கியத்தையும், பாத்தியத்தையும் அளித்து, தம் பங்கு உணவை அவருக்கு வழங்கினார். அது நியாயமான வழியில் ஈட்டப் பட்ட உணவு என்பதையும் அவருக்கு உணர்த்தி அதனை உண்ணுமாறு வேண்டினார்.

இவ்வாறு ஆதரவளித்து, உபசரித்து நேர்வழியில் ஈட்டிச் சமைக் கப்பட்ட உணவென பிராமணர் உறுதி அளித்தவுடன், அந்த அதிதியும் அக்கால் பங்கு சத்துமாவை உட்கொண்டார். ஆனால் அவருடைய பசியை ஆற்ற அது போதுமானதாக இருக்கவில்லை. இதைக் கண்ட பிராமணர் மிகுந்த கவலை கொண்டார். தம் வீட்டிற்கு வந்த ஒரு அதிதி பசியுடன் வெளியேறுவதை அவர் எவ்வாறு அனுமதிக்க முடியும்? தவிரவும், அவருக்கு வயிறார உணவு வழங்க எவ்வாறு உணவைத் தருவிப்பது? இப்படி எண்ணிய அந்த உஞ்சவிருத்தி பிராமணர் மனங்கலங்கினார்.

தன் கணவரின் மனவருத்தத்தை யூகித்த அப்பிராமணரின் மனைவி உடனே தன் பங்கு உணவை அதிதிக்கு அளிக்குமாறு கூறி, தன் கணவர் முன் அவ்வுணவை வைத்தாள். ஆனால் பிராமணரோ தம் மனைவியின் பங்கையளிக்கத் தயங்கினார். ஏனெனில், அவர் வயது முதிர்ந்த தம் மனைவி உண்ண உணவின்றி வெகு நாட்களாகப் பசித்திருப்பதை நன்கு அறிந்திருந்தார். ஆகாரமில்லாமல் எலும்புக் கூடாய் வற்றியிருந்த அவள் உடம்பு மேலும் பலம் குறைந்து நடுங்கிக் கொண்டிருந்தது. அந்நிலையில் அவருக்குத் தம் மனைவியின் பங்கை ஏற்று அதிதிக்கு அளிக்கத் துணிவு பிறக்கவில்லை. ஆனால், அவர் மனைவியோ, கணவனும் மனைவியும் சம உரிமையுடன் சேர்ந்தே தரும, அர்த்த, புருஷார்த்தங்களில் ஈடுபடவேண்டும்; அதன் பலனைப்

பெறுவதிலும் இருவருக்குமிடையே வேறுபாடு கிடையாது என்பதை அவருக்கு நினைப்பூட்டுகிறாள். மனைவியின் இந்த வற்புறுத்தல்களைக் கேட்டுப் பிராமணர் அவளுடைய பங்கையும் அதிதிக்கு அர்ப்பணித்தார். அவ்வுணவை உண்ட பின்னும் அதிதியின் பசி அடங்கவில்லை. அந்த பிராமணரோ மிகுந்த கவலை அடைந்தார்.

தந்தையின் வருத்தத்தைக் கண்ட மகன் உடனே அவரிடம் தன் பங்குக்குக் கிடைத்த உணவை ஏற்று அதிதிக்கு அளிக்குமாறு கூறுகிறான். ஆனால் அதனை ஏற்றுக் கொள்ள தந்தைக்கு மனம் வரவில்லை. ஒரு மகனுக்கு எவ்வளவு வயதானாலும் தந்தைக்கு அவன் சிறு குழந்தையே. தன் குழந்தை அதற்குத் தேவையான ஊட்டமின்றி பசியுடன் இருப்பதை ஒரு தந்தையால் எவ்வாறு சகிக்க முடியும்? ஆனால் அதிதியோ இன்னும் பசியுடன் இருந்தார். இந்நிலையில் செய்வதறியாது திகைத்த அவரிடம் மகன் கூறுகிறான்: 'புத்திரன் என்ற பதம் 'பித்ரு திராணம்' அதாவது பிதாவை கரையேற்றுதல் என்ற சொல்லில் இருந்து பிறக்கிறது. மேலும் புத்திரன் என்பவன் தந்தையின் மறுபிறவியைப் போல. தன்னிலிருந்தே உற்பத்தியான அப் புத்திரனால் தன் தருமம் காக்கப்படுவதில் எந்த தோஷமும் இல்லை.' இவ்வாறு கூறிய தன் புத்திரனின் புலனடக்கத்தையும் சீலத்தையும் கண்டு உஞ்சவிருத்தி பிராமணர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்து அவனுடைய பங்கு உணவையும் அதிதிக்கு அளித்தார். அவ்வுணவைப் புசித்த பின்னும் அந்த அதிதிக்குத் திருப்தி ஏற்படவில்லை. மீண்டும் அந்த பிராமணர் மிகுந்த கவலையில் ஆழ்ந்தார்.

இச்சமயம் அப்புத்திரனின் மனைவி, அவ்வீட்டின் மருமகள், தன் பங்கு உணவை, அதிதிக்கு அர்ப்பணிக்கும் பொருட்டுத் தன் மாமனாரின் முன் வைக்கிறாள். ஆனால் மருமகளின் பாகத்தை ஏற்றுக் கொள்வதில் அந்த பிராமணருக்கு மிகுந்த தயக்கம் ஏற்படுகிறது. அவளோ இளம் குழந்தை, அதுவும் பெண். அச்சிறு பெண் பல நாட்களாக உபவாசம் மேற்கொண்டு பசியினால் மிகவும் பலம் குன்றி இருக்கிறாள். அவளுடைய பங்கை எங்ஙனம் ஏற்றுக் கொள்வது? அவர் தம் மருமகளிடம், 'மகனின் இளம் மனைவியைப் பாது காப்பதே ஒரு மாமனாரின் கடமை. ஏனெனில் மருமகளே குடும்பத்தினர் அனைவரின் அன்பிற்கும் பரிவிற்கும் பாத்திரமானவள்' என்கிறார்.

இந்த விஷயத்தில் பிராமணருக்கு ஏற்பட்ட அளவு கடந்த தயக்கம் இயல்பானதே. ஆனால் மருமகளோ மிக உறுதியுடன், தன் மாமனாரிடம், இல்லத்தின் தலைவர் என்ற முறையில் அவர் தனக்கு குருவிற்குக் குருவாகவும் தெய்வத்திற்குத் தெய்வமாகவும் விளங்குப வர் என்றும், தான் மருமகள் என்ற முறையில் தன் உடல், பொருள், ஆவி அனைத்தையுமே இல்லத்தின் பெரியவர்களின் சேவைக்கு அர்ப் பணித்திருப்பதாகவும் கூறுகிறாள். இந்தத் தருமத்தின் புண்ணிய பலனைத் தான் அடைவதை அவர் தவிர்க்கக் கூடாதென்று வற்புறுத்து கிறாள். தருமத்தின் அடிப்படையிலான இம்மொழிகளைக் கேட்டு மாமனார் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறார். நன்னடத்தையுள்ள தம் மருமகளை ஆசீர்வதித்து, அவள் பங்கு உணவையும் அதிதிக்கு அர்ப் பணிக்கிறார்.

இவ்வாறு அந்த உஞ்சவிருத்தி பிராமணர் குடும்பம் தாம் மிகுந்த சிரமத்துடன் சேகரித்த சிறுமளவு உணவின் கடைசி பாகத்தையும் இல்லத்தை நாடி வந்த அதிதிக்கு அர்ப்பணித்ததைக் கண்டு அதிதி தேவன் பூரண மகிழ்ச்சி அடைகிறார். உண்மையில், சாக்ஷாத் தருமதேவனே அப்பிராமணருக்குத் தருமத்தின் மீதுள்ள பிடிப்பைச் சோதிக்கவெண்ணி அவ்வில்லத்திற்கு அதிதியாய்த் தோன்றினார். அதிதி தருமத்தைப் பின்பற்றுவதில் அந்த பிராமணருக்கு இருந்த தீவிரத்தைக் கண்டு, பெரு மகிழ்ச்சி அடைந்தார். பிராமணரும் அவருடைய குடும்பத்தினரும் இச்சோதனையில் வெற்றி அடைந்த னர். மிகச் சிரத்தையுடன் நேர் வழியில் உடல் வருத்தி சேகரித்த அந்தச் சிறுமளவு தானிய உணவு முழுவதையும், பசி தங்களை வருத்திய போதிலும், அக்குடும்பத்தினர் அதிதியைக் கண்டவுடன் மனமகிழ்ந்து இன்முகத்துடன் அவருக்கு அதை அளித்தனர். அன்னதான தருமத்தை நிலைநாட்டிய அக்குடும்பத்தினரைக் கண்டு தருமதேவர் சந்தோஷ மும் திருப்தியும் அடைந்து இவ்வாறு வாழ்த்தினார்: 'இந்த அன்ன தானத்தைக் கண்டு மேலுலகங்களில் சஞ்சரிக்கும் தேவர்களும் கந்தர் வர்களும் மட்டுமல்ல, அனைத்து தேவ ரிஷிகளும், பிரம ரிஷிகளும், இன்னும் மற்ற எல்லா மகா புருஷர்களும் கூட மிகுந்த ஆச்சரியம் அடைந்துள்ளனர். தபோநிஷ்டரான பிராமணரின் குடும்பம் அளித்த ஒரு கைப்பிடி அளவு சத்துமாவு தானத்தின் மகிமை மாபெரும் சக்கரவர்த்திகள் செய்த மகா ராஜசூய யக்ஞங்ளிலும் மகா அசுவமேத யக்ஞங்களிலும் அளிக்கப்பட்ட பற்பல மிகச் சிறந்த தானங்களை

எல்லாம் விட மகத்தானதாகும்.' உண்மையில் சிறுமளவு தானத்தால் அந்த பிராமணரின் குடும்பத்தினர் அழியா பிரமலோகத்தையே வென்றனர்[2]:

न राजसूयैर्बहुभिरिष्ट्वा विपुलदक्षिणैः ।
न चाश्वमेधैर्बहुभिः फलं सममिदं तव ।
सक्तुप्रस्थेन विजितो ब्रह्मलोकस्त्वयाक्षयः ॥

இவ்வாறு சாக்ஷாத் தருமதேவனாலேயே அந்தக் குடும்பம் ஆசீர்வதிக்கப்பட்ட பின், உடனடியாக அங்கு ஒரு திவ்வியமான விமானம் தோன்றுகிறது. தருமதேவனே அந்த பிராமணரை அவருடைய மனைவி, மகன், மருமகளுடன் விமானத்தில் ஏற்றிக் கொண்டு பிரமலோகத்திற்கு அழைத்துச் செல்கிறார். தருமதேவன் ஆசீர்வதித்தவாறு அந்த உஞ்சவிருத்தி பிராமணக் குடும்பத்தினர் இருவுலகிலும் கீர்த்தி பெற்றுச் சிறப்புற்றிருந்தனர்.

## புழுதியைப் பசும்பொன் ஆக்குதல்

குருக்ஷேத்திரத்தில் வசித்து வந்த தபஸ்வியான உஞ்சவிருத்தி பிராமணக் குடும்பத்தினரின் மேன்மையான அன்னதானக் கதையை உரைத்த அந்த திவ்விய ரூபம் கொண்ட கீரிப்பிள்ளை, யுதிஷ்டிரரின் அசுவமேத யக்ஞத்தில் கூடிய பிராமணர்கள் மற்றும் மகாபுருஷர்கள் நிறைந்திருந்த அச்சபையில், இத்தனை அற்புதங்களையும் அருகிருந்த ஒரு பொந்திலிருந்து தானே நேரில் கண்டதாகக் கூறியது. அந்த பிராமணர் குடும்பம் பிரமலோகத்திற்கு விமானத்தில் ஏறிச் சென்ற பின், அக்கீரிப்பிள்ளை பொந்திலிருந்து வெளி வந்தது. பிராமணரின் கைகளினால் அர்ப்பணிக்கப்பட்ட அந்த உணவின் நெடி கீரியின் மூக்கைத் துளைத்தது. பிராமணர் அதிதிக்கு அளித்த அர்க்கிய நீரால் ஈரமடைந்த மண் மீது அதன் உடல் பட்டது. பிராமணரைப் போற்றி ஆகாயத்திலிருந்து பூமியில் விழுந்த திவ்வியமான பூக்களின் மீது அது புரண்டது. மேலும், பிராமணரின் கைகளினின்றும் அதிதிக்கு வழங்கப்பட்ட அன்னத்தின் எஞ்சிய பகுதி அதன் மனதைக் கவர்ந்தது. இவ்வாறு அந்த ஈடற்ற அன்னதானத்தின் அன்னத்துடன் உண்டான

[2] மஹாபாரதம் ஆச்வமேதிக 90.103-4, ப. 6300

பரோட்ச சம்பர்க்கத்தால், அதாவது, வெறும் மறைமுகமான சங்கமத்தால் மட்டுமே கீரியின் தலையும் அதன் உடலில் ஒரு பக்கமும் பொன் மயமானது.

கீரிப்பிள்ளை அங்குக் கூடியிருந்த பிராமணர்களையும் மற்ற பெருமக்களையும் நோக்கி, குருக்ஷேத்திரத்து பிராமணரின் அன்னதான மகிமையால் தன் உடலில் பாதிப்பகுதி பொன்னாகியிருப்பதை அவர்களையே கண்கூடாகக் காணும்படி அறைகூவியது. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு தன்னுடைய உடலின் எஞ்சிய பகுதியும் எவ்வாறேனும் பொன்னிறம் ஆக வேண்டுமென்ற ஆசையுடன் தான் இடம் இடமாகத் தேடி அலைவதாகவும், ராஜா யுதிஷ்டிரர் நடத்தும் மகாயக்ஞத்தின் சிறப்பைக் கேட்டு அளவிலா ஆர்வத்துடன் அங்கு வந்ததாகவும், ஆனால் இங்கும் தன்னுடைய மீதி உடல் பொன்னாகவில்லை என்று மிகுந்த வருத்தத்துடன் அக்கீரிப்பிள்ளை கூறியது. குருக்ஷேத்திரத்து பிராமணர் தம் கைகளால் அளித்த அவ்வெளிய உணவைக் கண்டதாலும் தொட்டதாலும் மட்டுமே, அதனுடைய உடலின் பாதி பொன் மயமாயிற்று, ஆனால், ராஜா யுதிஷ்டிரர் நடத்திய அப்பெரும் யக்ஞத்தில் வழங்கப்பெற்ற அளவற்ற தானங்களில் அத்தகையதொரு சக்தியைக் காண முடியவில்லை என்று கூறியது அந்த திவ்வியமான ரூபம் உடைய கீரிப்பிள்ளை.

இவ்வாறு தன் நிராசையை வெளிப்படுத்திய பின்னர், அந்தக் கீரியானது சிரித்துக் கொண்டே மீண்டும் பெரும் கர்ச்சினை செய்து இவ்வாறு சாற்றியது: 'நான் அறிந்த வரை மகாத்துமா யுதிஷ்டிரரின் மிகச் சிறந்த யக்ஞம் உஞ்சவிருத்தி பிராமணரின் குடும்பம் தானமாக அளித்த ஒரு சிறுமளவு சத்துமாவுக்கு ஒருகாலும் ஈடாகவில்லை[3]:

सक्तुप्रस्थेन यज्ञोऽयं सम्मितो नेति सर्वथा।

இவ்வாறு முழக்கம் செய்து பின் அக்கீரிப்பிள்ளை அவ்விடத்திலிருந்து மறைந்தது. அங்குக் கூடியிருந்த மக்கள் அனைவரும் தத்தம் வீடு நோக்கிச் சென்றனர். இவ்வாறு மகாராஜா யுதிஷ்டிரரின் அந்த மகா அசுவமேத யக்ஞம் முடிவடைகிறது.

மகாத்துமா யுதிஷ்டிரரின் அச்சிறப்பான அசுவமேத யக்ஞமும் அங்கு அளிக்கப்பட்ட பெருமளவு அன்னதானமும் அந்த உஞ்சவி

[3] மஹாபாரதம் ஆச்வமேதிக 90.115, ப. 6301

ருத்தி பிராமணரின் சிறுமளவு அன்னதானத்திற்கு ஏன் ஈடாகவில்லை? அச்சிறப்பான யக்ஞத்தின் மகிமையில் அந்தக் கீரியின் மீதி உடல் ஏன் பொன்மயமாகவில்லை?

பாரதீய சிந்தனைக் கண்ணோட்டத்தின்படி, மகாயக்ஞங்களை மேற்கொள்வது மற்றும் தொடர்ந்து அளவிலா அன்னதானத்தையும் மற்றனைத்து தானங்களையும் செய்வது மாமன்னர்கள் மற்றும் தகுதி உடையோர் இயல்பாய் மேற்கொள்ள வேண்டிய கடமைகளாகும். அவர்கள் சமுதாயத்தில் குவிந்துள்ள தனதானியங்களுக்கும், இன்னும் மற்ற எல்லாவிதமான ஆற்றல்களுக்கும் உறைவிடமாய் விளங்கிப் பாதுகாப்பவர்கள் என்ற முறையில், அவ்வன்னம், தனம் முதலான வற்றை மீண்டும் சமூகத்திற்குப் பகிர்ந்தளிக்க வேண்டியது அவர்தம் பொறுப்பாகும். சமூகத்தில் திறமை உடைய பெருமக்கள் என்ற முறையில் சமூகத்தில் பசி தாகத்தாலும், பற்றாக்குறையாலும் வாடுவோர் இல்லாதிருக்குமாறும், மகாயக்ஞங்களின் மூலம் பொக்கிஷங்களில் நிறைந்த தனதானியங்கள் மீண்டும் சமூகத்தை அடைந்த வண்ணம் இருப்பதையும், சமூகத்தில் வளரும் கலை, கைவினைகள் மற்றும் பலவிதமான திறமைகளை வெளிப்படுத்த தகுந்த வாய்ப்புகள் எப்பொழுதும் கிடைக்குமாறும் ராஜ்யத்தின் அனைத்து விவகாரங்களையும் நடத்திச் செல்லுதல் அவர்தம் கடமையாகும். பின் வரும் அத்தியாயங்களில் நாம் பாரதீய அரசர்க ளுக்கு விதிக்கப்பட்டுள்ள இக்கடமைகளைப் பற்றி மேலும் விரி வாகக் காண்போம்.

எனினும், பகிர்ந்துண்ணும் பொறுப்பு மன்னருக்கும், திறமை உடைய பெருமக்களுக்கும் மட்டுமே உரியதல்ல. தான் உண்பதற்கு முன் தன் சுற்றுப்புறத்துள்ளோரின் பசிப்பிணி அகற்ற வேண்டிய கட்டுப்பாட்டைச் சமூகத்திலுள்ள அனைவருமே கடைப்பிடிக்க வேண்டும் என்பது பாரத நாட்டில் தொன்றுதொட்டு விளங்கிவரும் நியதியாகும். பாரதத்தின் பண்டைய நூல்களில் இந்த நியதி எத்துணை ஆணித்தரமாகவும் வெளிப்படையாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன என்பதை இனிவரும் அத்தியாயங்களில் காண்போம்.

சமூகத்தில் பசித்துயர் களைதல், வறுமையை அகற்றுதல், பகிர்ந் துண்ணுதல் போன்ற இயல்பான கோட்பாடுகள் ஒவ்வொருவரும் உறுதியுடன் பின்பற்ற வேண்டியவை. ஆனால் நாம் கண்ட உஞ்ச

விருத்தி பிராமணரின் கதை இப்பொதுவான நியதிகளுக்கும் மேலான ஒன்றை, தருமத்தின் உச்சநிலையை, எடுத்துரைக்கிறது. தருமத்தின் எல்லைகள் விரிந்து பரந்தவை. பேரரசர்களும், திறமையுடையோரும் தனதானியங்களைப் பகிர்ந்தளித்தல் மற்றும் சாதாரண கிருகஸ்தர்கள் எக்காலத்திலும் ஈத்துண்ணும் நியதியைக் கடைப்பிடித்தல் முதலிய பொதுவான கோட்பாடுகளையும் விட தருமத்தின் எல்லைக் கோடுகள் மிகவும் விரிந்தவை. தருமத்தின் பேரெல்லைகளையே கடந்துயர வேண்டுமெனில் உஞ்சவிருத்தி பிராமணரைப் போல் தான் பசித்திருந்தும் மற்றையோரின் பசி ஆற்றுதல் இன்றியமையாததாகும். மகா யக்ஞங்களை அனுஷ்டித்துத் தன் பொக்கிஷத்தில் நிறைந்திருக்கும் அன்னத்தையும் செல்வத்தையும் மக்களுக்குப் பகிர்ந்தளிக்கும் அரசன், மற்றும் தான் உண்ணும் முன் மற்றவரின் பசியை ஆற்றும் கிருகஸ்தன் ஆகிய இருவரும் தத்தம் கடமைகளைச் செய்து பாவங்கள் தம்மை அணுகாமல் தப்பித்து விடுகின்றனர். ஆனால் யார் தான் உண்ணுவதற்கென ஒரு சிறிதும் மீதம் வைத்துக் கொள்ளாமல் மாற்றானுக்கு உணவளிக்கிறானோ அவன் மிகுந்த புண்ணியத்தை அடைகிறான். தரும நெறியில் ஒழுகும் அரசர்களும், முறை தவறா கிருகஸ்தர்களும் தம் கடமைகளைச் செய்வதன் மூலம், படைப்பானது தன் எல்லைக்குள் நிலைபெற உதவுகின்றனர். அவர்களுடைய கருமங்களால் உலகமானது தன் இயல்பான போக்கில் தடையின்றிச் செல்லும். ஆனால் தான் பசித்திருந்து மற்றையோருக்குப் படைக்கும் பரந்த உள்ளம் உடையவர்களால் இவ்வுலகு புண்ணியமயமாகி விடுகிறது. இத்தகைய மகாதபஸ்விகளின் கருமங்களாலேயே புழுதியும் பொன்னாகிறது.

## கபோத தம்பதியினரின் கதை

மஹாபாரதத்தில், அதிதிகளின் பொருட்டுத் தம்மையே முழுமையாக அர்ப்பணிக்கும் தவநெறியில் வாழ்ந்து காட்டிய மற்றுமொரு இல்லறத்தாரின் உருக்கமான கதை கூறப்படுகிறது. இக்கதையின் நாயகன், மிகுந்த சீலமுடன் விருந்தோம்பும் ஒரு புறாவாகும். அதிதியாய் தோன்றுபவன் புறாவின் பத்தினியைக் கூண்டில் அடைக்கும் குரூர குணமுடைய ஒரு வேடன்.

ஆத்ம தியாகம் செய்த இந்தப் புறாவின் கதை மஹாபாரதத்தின் சாந்தி பர்வத்தில் கூறப்படுகிறது. இக்கதை யுதிஷ்டிரரின் சிறந்த

அசுவமேத யக்ஞத்தின் இறுதிக் கட்டத்தில், அந்த திவ்விய ரூபமு டைய கீரியின் மூலம் சொல்லப்பட்ட குருக்ஷேத்திரத்து உஞ்சவிருத்தி பிராமணரின் கதைக்குப் பலவிதங்களிலும் ஒப்பாக விளங்குகிறது. தபஸ்வியான அந்தப் பிராமணரும் புறாவைப் போன்றே ஒவ்வொரு தானியமாகச் சேகரித்துத் தனது வாழ்க்கையை நடத்தி வந்தார். இக்கதையில் தோன்றும் புறாவைப் போன்றே அவரும் தம் குடும்பத்தினரின் உயிர்களை ஒரு பொருட்டாகக் கருதாமல் அதிதிக்கு வேண்டியன அனைத்தையும் அளிக்கத் துணிந்தார்.

புறாத் தம்பதியினரின் இக்கதையைப் பீஷ்மபிதாமஹர், சாந்தி பர்வத்தினுள் அடங்கிய ஆபத்தர்ம பர்வத்தில், யுதிஷ்டிரருக்கு விவரிக் கிறார். இக்கதை முற்காலத்தில் முசுகுந்தனுக்குப் பார்கவ முனிவரால் சொல்லப்பட்டதென்று பீஷ்மபிதாமஹர் தெரிவிக்கிறார். ராஜா முசுகுந்தன் பார்கவ முனிவரிடம் தம்மை வந்து சரணடையும் ஒரு வரை ரக்ஷிக்கும் தருமத்தை விளக்குமாறு விண்ணப்பிக்க, முனிவர், கேட்போரின் பாவங்கள் எல்லாவற்றையும் அழிக்கவல்ல இந்த திவ்வியமான கதையைக் கூறத் தொடங்குகிறார்:

ஒரு சமயம் ஒரு பெரிய வனத்துள் ஒரு பயங்கரமான வேடன் ஒருவன் திரிந்து வந்தான். அவன் காகத்தை ஒத்த கரிய உடலையும் அதில் பழுத்துச் சிவந்த இரண்டு பயங்கர கண்களையும் கொண்டிருந் தான். பருத்த தொடைகளையும் மிகச் சிறிய பாதங்களையும், விசால மான முகத்தையும், பெரிய முகவாய்க்கட்டையும் கொண்டிருந்த அவன் பூமியில் அவதரித்த காலனைப் போன்று காணப்பட்டான். அவனுடைய கொடூரங்கள் அளவறியா. மிருதுவான எண்ணங்களுக்கு அவன் மனதில் இடமே இல்லை. வனத்தில் அவன் தினமும் வலை வீசி கூட்டங்கூட்டமாய்ப் பறவைகளைப் பிடித்து அவற்றின் மாமி சத்தை விற்றான். இதுவே அவனுடைய அன்றாட வேலையாக இருந்தது. கொடுமையான இந்தத் தொழிலை நீண்ட காலம் செய்து வந்தான். ஆனால் ஒருபோதும் அவன் தான் செய்யும் தொழில் அதருமமானது என்று உணரவில்லை.

ஒரு சமயம் அவன் எப்போதும் போல் பறவைகளைக் கொல்லக் காட்டினுள் திரிந்து கொண்டிருந்தான். அப்போது அங்கு திடீரென்று ஒரு பெரும் புயல் உருவானது. கடுங்காற்று வீசியதில் பெரிய மரங்கள் கீழே சாயத் தொடங்கின. வானத்தில் கருமேகங்கள் திரண்டு கானகத் தில் காரிருள் சூழ்ந்தது. எப்புறமும் அந்தகாரம் வியாபித்த அந்தக்

காட்டினுள் அவ்வப்போது தோன்றிய மின்னல் மட்டுமே ஒளி தந்தது. சிறிது நேரத்திற்கெல்லாம் பெருத்த மழை தொடங்கியது. மழையினால் சில நொடிகளுள் பூமி முழுதும் நீரில் மூழ்கியது.

திடீர் மழையினாலும் குளிரினாலும் வேடன் கலங்கினான்; தப்பிக்க வழியறியாது திகைத்தான். திக்குத் தெரியாமல் அந்த அடர்ந்த காட்டினுள் திரிகையில் அவன் மேட்டிலும் பள்ளத்திலும் சிக்கி இடறி விழுந்தான். சுற்றிலும் கூட்டங் கூட்டமாய்ப் பறவைகளும் விலங்கினங்களும் அஞ்சி நடுங்கி இங்குமங்கும் ஓடுவதைக் கண்டான். சிங்கங்கள், பன்றிகள் உள்பட பல மிருகங்கள் தங்குவதற்கு இடம் தேடி அலைந்தன. பறவைகள் தங்கள் கூடுகளைத் தேடிப் பறந்தன. ஆனால் மழையின் கடுமைக்கு ஈடு கொடுக்கவியலாத பல பறவைகள் பூமியில் விழுந்தன.

அந்த வேடனும் மழையாலும் குளிராலும் கிட்டத்தட்ட உயிர் போகும் நிலையை அடைந்து விட்டான். அவன் நிற்கவும், நடக்கவும் கூடத் திராணி இழந்தான். அந்நிலையில் அவன் ஒரு பெண் புறா கீழே விழுந்து கிடப்பதைக் கண்டான். குளிரால் நடுக்கமுற்ற அப்புறாவினால் பறக்கவோ, நகரவோ முடியவில்லை. வேடனும் கிட்டத்தட்ட அதே நிலையில் தான் இருந்தான். ஆயினும் பழக்க தோஷத்தால் அவன் அத்தருணத்திலும் அந்தப் புறாவைப் பிடித்துக் கூட்டினுள் அடைத்தான். பாவத்திலேயே உழன்று திரியும் அவனுக்குத் தான் துன்பத்தில் மூழ்கியிருக்கும் நிலையிலும் பாவத் தொழிலை செய்யாமல் இருக்க முடியவில்லை.

அப்போது, அவ்வேடன் திடீரென்று ஒரு மிகப் பெரிய செழிப்பான மரத்தைக் கண்டான். அதன் கிளைகள் அடர்த்தியாய், பசுமை போர்த்தியதாய்க் கார் மேகங்களைப் போன்று பூரிப்புடன் இருந்தன. எண்ணற்ற பறவைகள் அம்மரத்தின் நிழலையும் பழங்களையும் நாடி, அதில் குடி கொண்டிருந்தன. அந்த மரம் பிறருக்காகவே பிறந்தது போன்றிருந்தது. வேடனின் பார்வை அம்மரத்தின் மீது பட்ட உடனேயே வானில் கருமுகில் மறைந்து ஒளிரும் விண்மீன்கள் தோன்றத் தொடங்கின. ஆயிரக்கணக்கான பிரகாசிக்கும் நக்ஷத்திரங்கள் நிரம்பிய அந்த நிர்மலமான வானம் கண்களுக்கு அளித்த விருந்து அழகிய தாமரை மலர்கள் நிரம்பிய அகன்ற தடாகத்தை ஒத்திருந்தது.

இவ்வாறு வானம் தெளிவடைந்து விண்மீன்கள் கண்களுக்குப் புலப்பட்ட பின், அவ்வேடன், தான் தன் இருப்பிடத்திலிருந்து வெகு

தூரம் வந்து விட்டதை உணர்ந்தான். தவிர, இன்னமும் குளிரினால் நடுங்கிக் கொண்டிருந்தான். எனவே, அந்த இரவுப் பொழுதை அம் மரத்தின் அடியிலேயே கழிக்க எண்ணினான். மரங்களின் தேவதை களிடம் தன்னைக் காப்பாற்றும்படி வேண்டிக்கொண்டு, சில தழை களைத் தரையின் மீது பரப்பி விட்டு ஒரு கல்லைத் தலையணையாய் வைத்துக் கொண்டு உறங்கினான்.

தெய்வாதீனமாக, அம்மரத்தின் மீது, புள்ளிகள் உடைய ஒரு அழகான புறா தன் பந்துக்களுடன் வசித்து வந்தது. அதன் புறா மனைவி காலையிலேயே உணவிற்குத் தானியம் தேடக் கிளம்பியி ருந்தது. ஆனால் பொழுது சாயும் நேரம் ஆகியும் அது வீடு திரும்ப வில்லை. மாலை கழிந்து இரவுப் பொழுதும் ஆனதால் புறா தன் மனைவியைப் பற்றிக் கவலைப்படத் தொடங்கியது. அவ்வேடன் அந்த மரத்தடியை நெருங்கிய போது, அப்புறா தன் மனைவியை நினைத்து உருகி அவள் அழகையும், ஆழமான விசுவாசத்தையும் புகழ்ந்து மனம் கசிந்தவாறு இருந்தது. அது மீண்டும் மீண்டும் தன் துணையின் மனதைக் கவரும் செந்நிறக் கண்களையும், அழகான மேனியையும், மதுர மொழிகளையும் நினைத்தவாறு உருகியது. அழுத வண்ணம், அப்புறா, தன் பிரியமான பத்தினியானவள் கணவன் உண்ணாமல் ஒருபொழுதும் தான் உண்டதில்லை, கணவன் உறங்கும் முன் ஒருபொழுதும் தான் உறங்கினாள் இல்லை, கணவன் ஸ்நானம் செய்யும் முன்னர் தான் ஸ்நானம் செய்தாளில்லை எனக் கூறி அங்கலாய்த்தது. தன் மனைவியை நினைத்தவாறே, மிக தீனமான குரலில், 'அவள் எப்பேற்பட்ட பதிவிரதையெனில், சர்வகாலத்திலும் தன் கணவனின் துக்கத்தில் தன் துக்கத்தையும் கணவன் சுகத்தில் தன் சுகத்தையும் கண்டவள்' எனக் கூறிக் கொண்டது. தன் உயிருக்கும் மேலானவளான தன் மனைவியை நினைத்து இவ்வாறு வருந்திக் கொண்டிருந்த புறா, தன் மனைவி இல்லத்திற்குத் திரும்பவில்லை யெனில் தான் உயிர் வாழ்வதால் என்ன பயன் என்று வினவிக் கொண்டது. நல்லறம் காக்கும் இல்லறத்தாள் இல்லையெனில் அது எவ்வாறு இல்லறமாகும்? அந்த சாத்வியும், பதிவிரதையுமானவள் - அன்பும், அனுசரணையும் காட்டும் அத்துணைவி இல்லையெனில் அது எங்ஙனம் வீடாகும்? கொடும் காடேயன்றோ? இவ்வாறு புறாக் கணவன் தன் மனைவியை நினைத்து உருகியது.

மரத்தின் அடியில் வேடனின் கூண்டிற்குள் அடைபட்டிருந்த அப்புறா மனைவியோ கணவன் தன்னை நினைத்து உருகுவதைக்

கண்டு நிறைவடைந்தது. தன் குணங்களால் தன் கணவன் இன்பமும் திருப்தியும் அடைவதைக் கேட்ட அம்மனைவிக்கு அதைவிடச் சிறந்த செளபாக்கியம் வேறு என்ன இருக்க முடியும்? யாருடைய கணவன், மனைவியால் இத்துணை சந்தோஷம் அடைகிறானோ அந்த மனைவிக்கு இந்த பூமியில் கிடைக்கக் கூடிய பாக்கியம் வேறு என்ன இருக்க முடியும்? இவ்வாறு முழுநிறைவைப் பெற்ற அப்புறா மனைவி தன் துக்கத்தை மறந்தது. வேடனின் கூண்டிற்குள் உதவியற்ற நிலையில் இருந்த போதிலும் அப்புறா மனைவி, இல்லற தருமத்தைக் காக்கும் பொறுப்பைத் தன் கணவனுக்கு நினைப்பூட்டுவதிலேயே தன் மனதைச் செலுத்தியது. அது தன் கணவனிடம், 'நாதா! நம் இல்லத்திற்கு ஓர் அதிதி வருகை தந்துள்ளார். இச்சமயத்தில் உங்கள் கடமையாவது அதிதிக்கு ஆதரவளிப்பதே. நோக்குவீர்! அதிதியாய் வந்துள்ள இந்த வேடன் பசியாலும் குளிராலும் பீடிக்கப்பட்டு உறங்குகிறார். தாங்கள் என்னைப் பற்றிய நினைவை அறுத்து விட்டு இங்குச் சரணடைந்திருக்கும் அதிதியை வரவேற்று இனிய உபசார மொழிகள் உரைப்பீராக' எனக் கூறியது. மேலும் தொடர்ந்த அப் பெண் புறா, 'அன்புடையீர், தாங்கள் புத்திர பாக்கியத்தை அடைந்து விட்டீர்கள். புத்திரர்களைப் பெற்றுக்கொண்டுள்ளீர். அதனால் இப்போது தாங்கள் தங்களுடைய தேகத்தின் மீது கூட இரக்கம் காட்டாமல், தருமத்தையும் அர்த்தத்தையுமே துணை கொண்டு அதிதியாய் வந்துள்ள வேடனுக்கு அவருடைய உள்ளம் குளிருமாறு சேவை செய்வீராக' என்று கூறியது.

தன் மனைவியின் தர்மோபதேசத்தைக் கேட்ட ஆண் புறாவிற்கு புளகாங்கிதம் ஆனது. ஆனந்தத்தில் அதன் கண்கள் பனித்தன. உடனே அது பறவைகளின் பரம விரோதியான அந்த வேடனைப் பூஜித்து, 'தங்கள் வரவு நல்வரவு ஆகுக. நான் தங்களுக்கு என்ன பணிவிடை செய்ய வேண்டும்? என்னுடைய இச்சிறு குடிலை தங்களுடையதாகவே கருத வேண்டும். தற்போது தாங்கள் எவ்விதத்திலும் தயக்கம் கொள்ளத் தேவையில்லை' என்று பணிவுடன் கூறியது. மேலும் வேடனின் சங்கோஜத்தைப் போக்கும் வகையில், அது மிகவும் சிரத்தையுடன் உபசாரம் செய்து அவனுக்கு நம்பிக்கை உண்டாகுமாறு இங்ஙனம் உரைத்தது, 'தன் இல்லத்திற்கு வந்த அதிதி தன் பகைவனாக இருந்தாலும் உரிய முறையில் அவ்வதிதியைப் பேணுவது

இல்லறத்தாரின் கடமையாகும். ஒரு மரம் தன்னை அழிக்க வருவோருக்கும் நிழல் தர மறுப்பதில்லை அல்லவா [4]:

छेत्तुमप्यागते छायां नोपसंहरते द्रुमः ।

அவ்வேடனும் அப்புறாவின் விருந்தோம்பலை ஏற்றுத் தனக்குக் குளிர் தாங்கவில்லை என்றும் அதற்கு ஏதேனும் வழி செய்யுமாறும் வேண்டினான். உடனே, அப்புறா உலர்ந்த தழைகளைச் சேகரித்தது. கருங்கொல்லரிடம் பறந்து சென்று, தீ கொணர்ந்து, அச்சருகுகளுக்குத் தீ மூட்டியது. தீயின் நாக்குகள் வெகு விரைவில் உயர்ந்து சுற்றிலும் இதமான வெப்பத்தைப் பரப்பியது. கொடுமையான இயல்பு கொண்ட அந்த வேடனும் சுகமாக அவ்வெப்பத்தை அனுபவித்தான். தன் உடலில் சூடேறியவுடன், பசித் தொல்லையை உணரத் தொடங்கினான். தன் பசியைப் போக்க ஏதேனும் வழி செய்யுமாறு புறாவிடம் கூறினான்.

அப்புறாவின் இல்லத்தில் சேமித்து வைக்கப்பட்ட தானியம் என்ற பேச்சிற்கே இடமில்லை. அதுவோ வனத்தில் வாழும் பறவை. அன்றாடம் தன் இரையைத் தேடிக் கொணர்ந்தே அது வாழ்க்கையை நடத்தி வந்தது. அதனிடம் சேமிப்பு எங்ஙனமிருக்கும்? இந்நிலையில் அப்புறா பலத்த சிந்தனையில் ஆழ்ந்தது. சேமிப்பே இல்லாத தன் கபோத விருத்தியைப் பற்றியே அப்புறா வருத்தம் கொள்ளத் தொடங்கியது. இந்த வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? இல்லத்திற்கு வருகை தந்த ஒரு அதிதிக்குத் தகுந்த முறையில் உபசாரம் செய்யவியலாத வாழ்க்கை ஒரு வாழ்க்கை முறையாவென வருந்தியது.

ஆனால் விதிவசத்தால் தனக்கு இப்படிப்பட்ட வாழ்க்கை அமைந்துவிட்ட போதிலும் தன் இல்லத்திற்கு வந்துள்ள அதிதியைப் பசியுடன் வைத்திருக்க அப்புறாவினால் இயலவில்லை. தன் நிலைமையைப் பற்றி நன்கு சிந்தித்த பின் இறுதியில் அப்புறா ஒரு தீர்மானத்திற்கு வந்தது. சுற்றிலும் இருந்த காய்ந்த சருகுகளை மறுபடியும் சேகரித்து மீண்டும் தீயைப் பெரிதாக்கியது. பிறகு, வேடனிடம் நெருங்கிச் சென்று, 'என் இல்லத்தில் தங்களுக்கு உணவென அளிப்பதற்கு எதுவுமில்லை, எனினும், அதிதி தேவர் என் சரீரத்தையே உணவாய்க் கொள்ள வேண்டும்' என்று கூறிய அப்புறா

[4] மஹாபாரதம் சாந்தி 146.5, ப. 4807

அதிதியின் மனம் நிறைய வேண்டும் என்று மனதில் சங்கல்பம் செய்து கொண்டு, மும்முறை அவ்வக்னியை வலம் வந்து, பின் அதனுள் பிரவேசித்தது.

தன்னையே உணவாக அளித்த அந்தப் புறாவின் தியாகத்தைக் கண்டு அக்கொடூர குணமுடைய வேடன் பேரதிர்ச்சி அடைந்து குருதி உறைய நின்றான். தான் மேற்கொண்டுள்ளது கொடூரமான பாவ ஜீவனம் என்பதை உணரத் தொடங்கினான். அப்பாவத் தொழிலை இனியும் தொடர்வது அவனுக்கு இயலாத காரியமாயிற்று. மனநிறை வுடன் ஆத்ம தியாகம் செய்த அப்புறா அவ்வேடனுக்கு தரும நெறி யிலான வாழ்க்கைக்கு மிகச் சிறந்த உதாரணத்தை வழங்கியது. கொடூரமான தொழில் புரியும் அந்த வேடன் இப்போது தானும் புறாவைப் போன்ற புண்ணியமான பாதையைப் பின்பற்ற விரும்பி னான். உடனே அவன் பெண் புறாவைக் கூண்டினின்றும் விடுவித் தான். தன்னுடைய உடைமைகளான கம்பு, கை விளக்கு, வலை, கூண்டு ஆகிய அனைத்தையும் துறந்து விட்டு, கடுந்தவமும் விரதமும் மேற்கொள்ள சங்கல்பம் செய்து கொண்டவனாய்த் தன் இறுதி யாத்திரையை நோக்கிப் பயணமானான்.

கூண்டிலிருந்து வெளியேறிய பெண் புறா தன் கணவனுடன் தான் கழித்த இன்பமான நாட்களை நினைத்து சிறிது நேரம் அங்கலாய்த்தது; பின், கணவனை இழந்த துயர் தாங்கவியலாது தானும் அத்தீயினுள் புகுந்தது. இவ்வாறு தன் தேகத்தைத் துறந்து தன் கணவனுடன் சேர்ந்தது. உடனே திவ்வியமான விமானங்களில் எண்ணற்ற பல புண் ணிய கருமங்களைச் செய்த மகாத்துமாக்கள் புறாத் தம்பதியை மிகுந்த கௌரவத்துடன் சுவர்க்கலோகத்திற்கு அழைத்துச் செல்ல வருகை தந்தனர். அசாதாரணமான புண்ணியசீலர்களான புறாத் தம்பதியினர் அற்புத ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டு, திவ்விய மகாத்துமாக்க ளால் பூஜிக்கப்பட்ட ஒரு சிரேஷ்டமான விமானத்தில் எழுந்தருளினர். பல திவ்விய விமானங்களால் சூழப்பட்ட அச்சிறந்த விமானம் விரைவிலேயே சுவர்க்கலோகத்தைச் சென்றடைந்தது. தம் நற்காரியங் களால் எப்பொழுதும் போற்றப்பட்டு கபோத தம்பதியினர் சுவர்க்க லோகத்தில் பரமானந்தத்துடன் இருந்தனர்.

அவ்வேடனோ தன் ஆசை, மோகங்களை எல்லாம் விட் டொழித்து, முட்புதர்களும், கொடிய விலங்குகளும் நிரம்பிய ஒரு

பயங்கரமான மனித சஞ்சாரமற்ற அடர்ந்த காட்டிற்குள் பிரவேசித்தான். இறுதியில் அந்த பயங்கர வனத்தினுள் எழுந்த ஒரு பெரிய காட்டுத் தீக்கு இரையானான். இவ்வகையில் அவனுடைய பாவங்களும் எரிந்து போயின. இவ்வாறாக கொடுமையான தொழிலில் ஈடுபட்ட வேடனும் கூட புண்ணியசீலர்களான புறாத் தம்பதியினரின் புண்ணிய சகவாசத்தால் நற்கதி அடைந்தான்.

இவ்வாறு அந்தப் புறாத் தம்பதியினர் அற்புதமான முறையில் அதிதி சேவை செய்து கிருகஸ்தாசிரம தருமத்தைப் பேணிப் போற்றினர். தருமத்தின் மீதிருந்த ஆழ்ந்த பற்றினால் அவர்கள், தாம் மட்டும் சுவர்க்கலோகத்தை அடையவில்லை; கொடுந்தொழில் புரியும் பாவியான வேடனையும் தருமத்தின் வழியில் செலுத்தி அவனும் நற்கதி அடைய வழிவகுத்தனர்.

கபோத தம்பதியினர் தங்களது இல்லத்திற்கு வருகை தந்த அதிதியின் பசிக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டுச் செய்தது நிச்சயமாக ஒரு அசாதாரண தியாகமே. ஆனால் தங்களின் அசாதாரண கருமத்தால் அவர்கள் உண்மையில் ஒரு கிருகஸ்தன் கடைப்பிடிக்க வேண்டிய சாதாரண தருமத்தையே நிறைவேற்றினர். இல்லத்திற்கு வரும் அதிதியைப் பணிவுடன் உபசாரம் செய்வதும் எல்லா விதங்களிலும் அவர்களைப் பரிபூரணமாக நிறைவடையச் செய்வதும் ஓர் கிருகஸ்தனின் இயல்பான தருமம். இதையே அப்புறாவும் வேடனிடம் கூறியது [5]:

अरावप्युचितं कार्यमातिथ्यं गृहमागते ।
छेत्तुमप्यागते छायां नोपसंहरते द्रुमः ॥

பகைவனே அதிதியாய் நம் இல்லத்திற்கு வருகை தந்தாலும் அவனை முறையாக வரவேற்று உபசரிப்பது அவசியம். எந்த மரமும் தன்னையே வெட்ட வரும் ஒருவனுக்கு நிழல் தரத் தயங்குவதில்லை அல்லவா.

மேலும் அப்புறா தொடர்ந்தது [6]:

शरणागतस्य कर्तव्यमातिथ्यं हि प्रयत्नतः ।
पञ्चयज्ञप्रवृत्तेन गृहस्थेन विशेषतः ।

[5] மஹாபாரதம் சாந்தி 146.5, ப. 4807
[6] மஹாபாரதம் சாந்தி 146.6-7, ப. 4807-8

पञ्चयज्ञांस्तु यो मोहान्न करोति गृहाश्रमे ।
तस्य नायं न च परो लोको भवति धर्मतः ॥

*தன்னைச் சரணாகதி அடையும் அதிதியை முறையாக உபசரிப்பது யாரும் மீறத் தகாத ஒரு கடமை. ஆனால் பஞ்சமகாயக்ஞத்தில் நிலைப்பெற்றிருக்கும் கிருகஸ்தனுக்கு அது விசேஷ கடமையாகிறது. யார் கிருகஸ்தாசிரமத்தில் நிலைகொண்டு, பஞ்சமகாயக்ஞத்தைக் கடைப்பிடிக்கவில்லையோ அவனுக்கு இவ்வுலகிலும் மறுவுலகிலும் தருமத்தின் ஒப்புதலுடன் பெறக் கூடிய இடம் எதுவுமில்லை.*

*கிருகஸ்தனானவன் கனி ஈந்தும் பெரு மரத்தைப் போன்றவன். அவன் இல்லத்தை அடையும் அதிதிகள் அனைவருமே ஆதரவும் உபசாரமும் பெற உரிமையுடையவர்களாம். இல்லத்திற்கு வருகை தரும் அதிதிகளுக்கு மட்டுமல்லாது சுற்றுப்புறத்து உள்ள அனைத்து ஜீவன்களின் பசியையும் ஆற்றுதல், மற்றும் தான் உண்பதற்கு அமரும் முன் அனைவரின் பங்கையும் அளித்தல் எனும் கிருகஸ்தர்களுக்குரிய இந்த நித்தியக் கோட்பாடே பஞ்சமகாயக்ஞம் என்று பெயர் பெற்றுள்ளது. இனி வரும் அத்தியாயத்தில் நாம் கிருகஸ்தாசிரமத்தின் மீறத் தகாத இந்த நித்திய கருமத்தைப் பற்றி விரிவாகக் காண்போம்.*

*மஹாபாரதத்தில், புறாத் தம்பதியினரும் குருக்ஷேத்திரத்து வாசியான உஞ்சவிருத்தி பிராமணர் குடும்பமும் அசாதாரணமான மகாயக்ஞத்தைக் கடைப்பிடித்தனர். கிருகஸ்தாசிரமத்தில் இருந்தபோதிலும் அவர்கள் மகத்தான தவத்தைச் செய்தனர். இனி நாம் சாதாரண கிருகஸ்தர்களின் இயல்பான, ஆனால், முறையான வாழ்வில் ஒவ்வொரு நாளும் ஆற்ற வேண்டிய சாதாரண பஞ்சமகாயக்ஞத்தைப் பற்றிக் காண்போம்.*